பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 9

இப்னு பாஸ் ﷺ வாழ்க்கைக் குறிப்பு 17

1 தன்னையும் தன் குடும்பத்தாரையும் நரகை விட்டும் காப்பாற்றுவது கட்டாயமாகும் 21

2 பெற்றோருக்கு நன்மை செய்வது கட்டாயமாகும் 30

3 தனது தாயை வெறுத்து ஒதுக்கியவருக்கான சட்டம் 34

4 பெற்றோர் இறந்த பிறகு அவர்களுக்கு நன்மை செய்வது எப்படி? 38

5 குர்ஆன் ஓதி அதன் நன்மைகளை பெற்றோர்களுக்கோ அல்லது மற்றோருக்கோ சமர்ப்பிப்பதன் சட்டம் 40

6 பெற்றோருக்குத் தீங்கு செய்வதன் ஓர் அம்சம் 43

7 தனது பெற்றோருக்குத் தீங்கு செய்பவன் பாவமன்னிப்புக் கோருவதும் அவர்களது மரணத்திற்குப் பிறகு அவ்விருவருக்காக துஆ செய்வதும் கட்டாயமாகும் 45

8 தாய் மற்றும் குடும்பத்தினருக்காக விழா கொண்டாடுவது குறித்த இஸ்லாமின் தீர்ப்பு 48

9 தாயின் உரிமை தந்தையின் உரிமையைவிட மிக உன்னதமானது 56

10 ஹஜ்ஜு விசயத்தில் தந்தையைவிடத் தாய்க்கு முக்கியத்துவம் கொடுப்பது சிறந்தது. ஏனெனில், அவளது உரிமை மிகுந்த மகத்துவம் நிறைந்ததாக உள்ளது 57

11 இறைவழியில் அறப்போர் புரியாதபோது தாய்க்குப் பணிவிடை செய்வதற்கான சட்டம் 61

12 சிகிச்சைக்காக தாயை மருத்துவமனையில் சேர வலியுறுத்தும் மகள் 64

13 தனது தாய் விரும்பாத நிலையில் படிப்பை விட்ட பெண் 65

14 உனது தாய் கட்டளை இட்டாலும் எவ்விதக் குற்றமும் இன்றி உனது மனைவியை மண விடுதலை செய்வது நன்மையான காரியம் அல்ல 67

15 மனைவியால் உனக்கு எந்தவிதமான தொந்தரவும் இல்லாதபோது அவளை தலாக் சொல்லும் விசயத்தில் தாய்க்கு நீ கட்டுப்பட வேண்டியதில்லை 70

16 சத்தியத்தின்மீது நிலைத்திருப்பதும் படைத்தவனுக்கு மாறுசெய்யும் விசயத்தில் மற்றோருக்குக் கட்டுப்படாதிருப்பதும் கட்டாயமாகும் 72

17 நற்காரியங்களில் தந்தைக்குக் கட்டுப்படுவது 74

18 தொழாத பெண்ணைத் திருமணம் முடிக்க தந்தை சொல்லும்போது அவருக்குக் கட்டுப்படுவது நன்மையான காரியம் அல்ல 76

19 மகன் தன் தந்தையை தனக்கு கொடுக்கவேண்டியதை கொடுக்குமாறு நிர்ப்பந்தம் செய்வது குறித்த சட்டம் 78

20 கஞ்சராக இருக்கும் தந்தையின் செல்வத்திலிருந்து உரிய அளவிற்கு எடுப்பது 80

21 தந்தை செலவுக்கு தர மறுத்தால் தாய் தனது கணவரின் செல்வத்திலிருந்து அவருக்கு தெரியாமலேயே எடுத்து பிள்ளைகளின் செலவுக்குக் கொடுப்பார் 81

22 தந்தையருக்கு அறிவுரை 83

23 மார்க்க விசயத்தில் பிள்ளைகள் மாறு செய்வதைக் கண்டுகொள்ளாமல் உடந்தையாக இருத்தல் 86

24 பிள்ளைகளிடையே நீதமாக நடந்துகொள்வது 89

25 மூன்று பெண் குழந்தைகளைப் பராமரித்து வளர்ப்பது 92

26 இஹ்சான் என்பதன் பொருள் 95

27 அகீகா குறித்த சட்ட விளக்கம் 96

28 மார்க்கப்படி அகீகா செய்வதன் வழிமுறை 98

29 மார்க்கப் புறம்பான பெயர்களை மாற்றுவது கட்டாயமாகும் 100

30 நல்ல முறையில் மனைவியுடன் சேர்ந்து வாழுங்கள் 102

31 பெண்களுக்கு நலன் செய்தல் 104

32 சொந்த மகன்களிடமிருந்து தனது கணவர் பொருள் பெறுவதை ஆட்சேபிக்கும் உரிமை மனைவிக்கு இல்லை 107

33 இயன்ற அளவிற்கு உறவினர் நலன் காப்பது கட்டாயமாகும் 109

34 குற்றச்செயலில் ஈடுபடும் உறவினர்களுடன் தொடர்புகொள்வது 112

35 உறவினர்கள் செய்யும் தீமைகளைத் தடுப்பது 115

36 ஓர் இறைநம்பிக்கைகொண்ட பெண் தனது சகோதரிக்கு அறிவுரை கூறுவது 116

37 குற்றம் புரிபவரை விட்டும் விலகி இருத்தல் 118

38 இரு சாராருக்கு மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது 120

39 நீண்ட வாழ்நாளுக்காக துஆ செய்வது 122

40 பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு மத்தியில் சிறப்பிடம் கொடுப்பது 123

41 தொழுகையை நிறைவேற்றாமலும் றமளான் நோன்பு நோற்காமலும் இருக்கும் நண்பருடன் தொடர்பு வைத்துக்கொள்வது குறித்த சட்டம் 124

42 அநாதைக்கும் ஏழைக்கும் இஸலாம் வழங்கும் முக்கியத்துவம் 127

43 அனாதைகளைப் பராமரித்தல் 135

44 அனாதையின் பொருளைச் செலவழிப்பதற்கான சட்டம் 136

45 தனித்தனியாகவும் கூட்டாகவும் முஸ்லிம்களின் நிலைமைகளை ஆராயத் தூண்டுவது 138

46 குறைந்த அளவாக இருந்தாலும் தானதர்மங்களை அதிகமாக வழங்குமாறு முஸ்லிம்களுக்கு இஸ்லாம் அறிவுறுத்துகிறது 144

47 கண்ணியமிக்க குர்ஆனைப் பாதுகாக்கும் விசயத்தில் பொருளாதார உதவிபுரிவதற்கான அழைப்பு 146

48 நோன்பாளிகள் நோன்பு திறப்பதற்காகப் பங்களிப்புச் செய்வது 148

49 இறந்தோருக்காகக் குர்ஆன் ஓதுவது குறித்த சட்டம் 149

50 குற்றவாளியின்மீது இரக்கம் காட்டுவது கூடும் 152

1

தன்னையும் தன் குடும்பத்தாரையும் நரகை விட்டும் காப்பாற்றுவது கட்டாயமாகும்

❀

அல்லாஹ்வின் பெயரால்... கிருபையும் சாந்தியும் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின்மீது உண்டாகட்டும்.

கண்ணியமும் மகிமையும் நிறைந்த அல்லாஹ் தனது அருள் மறையில் கூறுகின்றான்:

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا قُوا أَنفُسَكُمْ وَأَهْلِيكُمْ نَارًا وَقُودُهَا النَّاسُ وَالْحِجَارَةُ عَلَيْهَا مَلَائِكَةٌ غِلَاظٌ شِدَادٌ لا يَعْصُونَ اللَّهَ مَا أَمَرَهُمْ وَيَفْعَلُونَ مَا يُؤْمَرُون

‘இறைநம்பிக்கையாளர்களே! உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் நரகிலிருந்து தற்காத்துக்கொள்ளுங்கள். அதன் எரிபொருள் மனிதரும் கற்களுமாகும். அதன்மீது கடுமையும் கொடூரமும்கொண்ட வானவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அல்லாஹ் தங்களுக்கு இடும் கட்டளைகளுக்கு மாறுசெய்ய மாட்டார்கள். தங்களுக்கு இடப்பட்ட ஆணைகளை நிறைவேற்றுவார்கள்.’ (குர்ஆன் 66:6)

பரிசுத்தம் நிறைந்த அல்லாஹ் தனது நம்பிக்கைகொண்ட அடியார்கள் தங்களை மட்டுமல்ல, தங்களது குடும்பத்தினரையும் அல்லாஹ்வின் வேதனையிலிருந்து பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென கட்டளையிடுகின்றான். இறையச்சத்தினாலும் அதனை உரிய முறையில் கடைப்பிடிப்பதன் மூலமும்தான் அது சாத்தியமாகும். நரகிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான சாதனம் அல்லாஹ்வை அஞ்சி அவனது மார்க்கத்தை உறுதியாக கடைப்பிடிப்பதாகும். அத்துடன் பெற்றோர்கள், பிள்ளைகள், சகோதரர்கள் மற்றும் ஏனைய உறவினர்களுக்கும் இறையச்சத்தைப் பேணி நடக்குமாறு அறிவுறுத்திக்கொண்டே இருக்க வேண்டும். சத்திய போதனைகளின் மூலமாகவும் நன்மை மற்றும் இறையச்ச செயல்பாடுகளிலும்

4

பெற்றோர் இறந்த பிறகு அவர்களுக்கு நன்மை செய்வது எப்படி?

❀

வினா: எனது தாய் மரணமடைந்த பிறகு அவளுக்கு நான் எப்படி நன்மை செய்வேன்?

பதில்: ஆதாரப்பூர்வமான நபிமொழி வருமாறு:

ثبت عن النبي صلى الله عليه وسلم أنه سأله سائل فَقَالَ: يَا رَسُولَ اللَّهِ، هَلْ بَقِيَ مِنْ بِرِّ أَبَوَيَّ شَيْءٌ أَبَرُّهُمَا بِهِ بَعْدَ مَوْتِهِمَا؟ قَالَ: نَعَمْ الصَّلَاةُ عَلَيْهِمَا، وَالِاسْتِغْفَارُ لَهُمَا، وَإِنْفَاذُ عَهْدِهِمَا مِنْ بَعْدِهِمَا، وَصِلَةُ الرَّحِمِ الَّتِي لَا تُوصَلُ إِلَّا بِهِمَا، وَإِكْرَامُ صَدِيقِهِمَا

நபி ﷺ அவர்களிடம் ஒருவர், 'அல்லாஹ்வின் தூதரே! எனது பெற்றோர் இறந்த பிறகு அவர்களுக்கு நான் செய்ய வேண்டிய நன்மைகள் ஏதேனும் மீதமிருக்கிறதா?' என வினவினார். அதற்கு நபி ﷺ அவர்கள், 'அந்த இருவருக்காகவும் துஆ செய்வது, அவ்விருவருக்காகவும் பாவமன்னிப்புக் கோருவது, அவர்களது ஒப்பந்தங்களை அவ்விருவருக்குப் பிறகு நிறைவேற்றுவது, அவ்விருவரின் நண்பர்களைக் கண்ணியப்படுத்துவது, அவ்விருவரின் மூலமாகவே உறவுமுறை உண்டாகும் சொந்தக்காரர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்வது ஆகியவையாகும்' என்று பதிலளித்தார்கள். (அறிவிப்பு: அபூ ஸயீத் மாலிக் இப்னு ரபீஆ ؓ, சுனனு அபீ தாவூத் 5142 ளயீஃபு)

எனவே, தாய்க்காக துஆ செய்யுமாறும், பாவமன்னிப்புக் கோருமாறும், மார்க்கரீதியான அவளது உபதேசத்தைச் செயல்படுத்துமாறும், அவளது தோழிகளைக் கண்ணியப்படுத்துமாறும், உனது தாய்மாமன்களையும் தாயின் சகோதரிகளான சாச்சி, பெரியம்மாக்களையும் தாயின் மூலமாக ஏற்படும் உனது ஏனைய சொந்தக்காரர்களையும் கண்ணியப்படுத்துமாறும் உமக்கு உபதேசம்

9

தாயின் உரிமை தந்தையின் உரிமையைவிட மிக உன்னதமானது

❀

வினா: தாயின் உரிமை தந்தைக்கான உரிமையைவிட மேலானதா?

பதில்: தாய்க்கான உரிமை தந்தைக்கான உரிமையைவிட மிக்க மேலானது என்பதில் எத்தகைய சந்தேகமும் இல்லை. அதற்குரிய காரணங்கள் பல உண்டு. ஆதாரப்பூர்வமான நபிமொழிகளில் வந்துள்ளது:

جَاءَ رَجُلٌ إِلَى رَسُولِ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَقَالَ: يَا رَسُولَ اللَّهِ، مَنْ أَحَقُّ النَّاسِ بِحُسْنِ صَحَابَتِي؟ قَالَ: أُمُّكَ قَالَ: ثُمَّ مَنْ؟ قَالَ: أُمُّكَ قَالَ: ثُمَّ مَنْ؟ قَالَ: أُمُّكَ قَالَ: ثُمَّ مَنْ؟ قَالَ: أَبُوكَ ثُمَّ الأَقْرَبَ فَالأَقْرَبَ

ஒரு மனிதர் நபிகளார் ﷺ அவர்களிடம், 'அல்லாஹ்வின் தூதரே! நல்ல தோழமை வைத்துக்கொள்வதற்கு மக்களில் அதிகமான தகுதி படைத்தவர் யார்?' என்று வினவினார். அப்போது நபி ﷺ அவர்கள், 'உமது தாய்' என்றார்கள். 'பிறகு யார்?' என அவர் வினவினார். அப்போதும் நபி ﷺ அவர்கள், 'உமது தாய்' என்றார்கள். 'பிறகு யார்?' என அவர் வினவினார். அப்போதும் நபி ﷺ அவர்கள், 'உமது தாய்' என்றார்கள். 'பிறகு யார்?' என அவர் வினவினார். அப்போது நபி ﷺ அவர்கள், 'உமது தந்தை! பிறகு அடுத்தடுத்த நெருங்கிய உறவினர்கள்' எனப் பதிலளித்தார்கள். *(அறிவிப்பு: அபூ ஹுரைறா ؓ, புகாரீ 5971, முஸ்லிம் 2548, சுனனுத் திர்மிதீ 1897)*

பிறிதோர் அறிவிப்பில், 'நான் அதிக நன்மை செய்வதற்கு தகுதி யானவர் யார்?' என்ற கேள்விக்கு நபி ﷺ அவர்கள் மேற்கூறியவாறு பதிலளித்த செய்தி இடம் பெற்றுள்ளது.

12

சிகிச்சைக்காக தாயை மருத்துவமனையில் சேர வலியுறுத்தும் மகள்

❀

வினா: நீ தாயை மருத்துவமனையில் சேர வலியுறுத்துவதால் அதிகமாக வேதனைப்படுகிறாய். அதனால் அவள் அதிக களைப் பிற்கு உள்ளாகிறாள் என்று எனக்கு கூறப்பட்டது.

பதில்: அல்லாஹ் நாடினால் அதனால் உன்மீது எந்தக் குற்றமும் இல்லை. ஏனெனில், நீ அவளது நன்மை, ஆரோக்கியம் மற்றும் சிகிச்சைக்கான வழிமுறைகளைச் செய்ய விரும்பிப் பாடுபடுகிறாய். அதற்காக உனக்கு பெரும் நற்கூலியும் முழுமையான வெகுமதி யும் கிடைக்கும். அல்லாஹ் அதன் மூலம் தந்தை மற்றும் விருப்பத்திற் குரியவர்களுடன் கண்ணியம் நிறைந்த வீட்டில் உன்னை ஒன்று சேர்க்க ஆதரவு வைக்கிறோம்.

30

நல்ல முறையில் மனைவியுடன் சேர்ந்து வாழுங்கள்

❀

கேள்வி: *எனது கணவர் என்னை அடிக்கிறார். பல பிரச்சினைகளில் தகுதி இல்லாத வகையில் எனது முகத்தில் காரி உமிழ்கிறார். அது குறித்த தங்களின் கருத்து யாது?*

பதில்: கணவர் இறையச்சத்தோடு நடந்துகொள்வது கட்டாயமாகும். அவளை அடிப்பதோ, உமிழ்வதோ கூடாது. தெளிந்த விரிவான சிந்தனையுடன் நடந்துகொள்ள வேண்டும். ஏனெனில், அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

وَعَاشِرُوهُنَّ بِالْمَعْرُوفِ

அவர்களுடன் நல்லமுறையில் இணைந்து வாழுங்கள். *(4:19)*

அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறினார்கள்:

فَاتَّقُوا اللهَ فِي النِّسَاءِ، فَإِنَّكُمْ أَخَذْتُمُوهُنَّ بِأَمَانِ اللهِ، وَاسْتَحْلَلْتُمْ فُرُوجَهُنَّ بِكَلِمَةِ اللهِ

பெண்களின் நலன் கருதி செயல்படுங்கள். ஏனெனில், நீங்கள் அவர்களை அல்லாஹ்வின் அமானத்தாகவே பெற்றுக் கொண்டுள்ளீர்கள். அல்லாஹ்வின் கட்டளைப்படி அவர்களுடன் இன்பம் அனுபவிக்கிறீர்கள். *(முஸ்லிம் 1218)*

எனவே பெண்களின் நலன் கருதி செயல்படுங்கள். அல்லாஹ் கண்காணித்துக் கொண்டிருக்கிறான் என்ற உணர்வுடன் இறையச்சத்துடன் கணவன் நடந்துகொள்ள வேண்டும். நல்ல வார்த்தைகள் பேசி நன்னடத்தை மேற்கொண்டு மனைவியுடன் அழகிய முறையில் குடும்பம் நடத்த வேண்டும். அவளை அடிக்கலாகாது; அருவருப்பாக நடந்துகொள்ளக் கூடாது. அவரது பேச்சும் செயலும் இனிமையாக இருக்க வேண்டும். இது அவன் மேற்கொள்ள வேண்டிய கட்டாயமான நடைமுறைகளாகும். எனினும், மனைவி

34

குற்றச்செயலில் ஈடுபடும் உறவினர்களுடன் தொடர்புகொள்வது

❀

வினா: ஒரு மனிதரது உறவினர்கள் பள்ளிவாசலில் ஜமாஅத்துடன் தொழும் விசயத்தில் பின்தங்கி இருக்கிறார்கள். மேலும், அதிகமான குற்றச்செயல்களிலும் தீமைகளிலும் ஈடுபடுகிறார்கள். உறவினர்கள் தடுக்கப்பட்ட தீமைகளைத் தொடர்ந்து செய்துவரும் நிலையில் அம்மனிதர் அவர்களுடன் சேர்ந்திருப்பதும் தொடர்புகொள்வதும் எப்படிச் சாத்தியமாகும்? அவர்கள் அந்நிலையில் இருந்தால் தனது பெற்றோர்களுக்கு நன்மை செய்வது எவ்விதம் சாத்திய மாகும்?

பதில்: அவர்கள் ஏழைகளாக இருந்தால் அவர்களுக்குப் பொருள் கொடுத்து தொடர்புகளை வலுப்படுத்திக்கொள்வதும் அவர்களுக்கு நன்மை செய்வதும் அவர்மீது கட்டாயமாகும். மேலும், அவர் களுக்கு அறிவுரை கூறி அவர்களை நற்செயல்களின் பக்கமாகத் திருப்புவதும், நன்மைகளைச் செய்யுமாறும் தீமைகளை விட்டும் விலகி இருக்குமாறும் அவர்களை அறிவுறுத்துவதும் அவர் மீதுள்ள பொறுப்பாகும். பெற்றோர்கள் அல்லது சகோதரர்கள் அல்லது சின்னம்மா, பெரியம்மாக்கள் அல்லது சித்தப்பா பெரியப்பாக்கள் அல்லது மற்றோர் யாராக இருந்தாலும் அவர்களை அல்லாஹ்வின் பக்கமாக அழைப்பதும், அவர்களுக்கு அறிவுரைகள் கூறுவதும், மென்மையாகவும் எளிமையாகவும் அழகிய முறையிலும் அவர் களுக்கு நன்மையை ஏவி தீமைகளை விட்டும் தடுப்பதும் அவர் மீதுள்ள கட்டாயப் பொறுப்பாகும். அவரது மென்மையான அணுகுமுறையால் அல்லாஹ் அவர்களுக்கு நேர்வழிகாட்டுதல்கள் வழங்கக்கூடும். அவர்கள் ஏழைகளாக இருந்தால் அவர்களுக்கு பொருள் உதவி வழங்குவார். அவரிடம் ஸகாத் பொருள் இருந்தால் தந்தையர் மற்றும் பிள்ளைகளை விடுத்து ஏனைய உறவினர்களான

39

நீண்ட வாழ்நாளுக்காக துஆ செய்வது

❀

கேள்வி: நீண்ட வாழ்நாளுக்காக துஆ செய்வது கூடுமா? அல்லது வாழ்நாள் இறைவன் விதித்தபடி நடைபெறுவதால் நீண்ட வாழ்நாளுக்காகத் துஆ செய்வதன் மூலம் எவ்விதப் பயனும் இல்லையா? விளக்கவும்.

பதில்: அதனால் எவ்விதக் குற்றமும் இல்லை. சிறந்த முறையாதெனில், ஒருவருக்குப் பயன் தரும் வார்த்தைகளைச் சேர்த்துச் சொல்லி அவருக்காக துஆ செய்வதாகும். எடுத்துக்காட்டாக அல்லாஹ்விற்குக் கட்டுப்படும் வகையில் அல்லது நன்மையானவற்றில் அல்லது அல்லாஹ் திருப்திகொள்ளும் வகையில் அல்லாஹ் உமக்கு நீண்ட ஆயுளைத் தருவானாக என்று ஒருவருக்காக துஆ செய்யலாம். துஆ விதிக்கு முரணானது அல்ல. மாறாக மாத்திரைகள், ஓதிப்பார்த்தல் ஆகியவை போன்று அதுவும் விதியில் அடங்கும் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். அல்லாஹ்வின் மார்க்கத்திற்கு மாறுபடாத அனைத்து காரணங்களும் விதிக்கு உட்பட்டதுதான். நோயாளி, ஆரோக்கியமாக இருப்பவர், துஆ செய்யப்படுபவர், துஆ செய்யப்படாதவர் ஆகியோரின் விசயத்தில் அல்லாஹ் விதித்தபடியே நடைபெறும். எனினும், தூய்மை நிறைந்த அல்லாஹ் மார்க்க நெறிகளுக்கு உட்பட்டுச் சில காரணகாரியங்களை அனுமதித்துள்ளான். அவன் நாடிய விதத்தில் அதனை முறைப்படுத்தியுள்ளான். அவை யாவும் அல்லாஹ்வின் விதிக்கு உட்பட்டதாகும். அல்லாஹ் நல்லருள் புரிய பொறுப்பாளன் ஆவான்.

50

குற்றவாளியின்மீது இரக்கம் காட்டுவது கூடும்

❀

கேள்வி: முஸ்லிமான மனிதர் ஒருவர் மரணமடைந்துவிடுகிறார். எனினும், அவர் தனது வாழ்நாளில் பாவியாக வாழ்ந்துள்ளார். அந்நிலையில் அவர்மீது இரக்கம் காட்டுவது கூடுமா?

பதில்: ஆம், பாவியாக இருந்தாலும் அவருக்காக ஜனாஸா தொழுவது போன்று அவர்மீது பரிவு காட்டுவதும் அவரது பாவமன்னிப் பிற்காக துஆ செய்வதும் கூடும். அதே நேரத்தில் அவர் நிராகரிப் பாளராக இருந்தால் இந்நிலை கூடாது. அல்லாஹ் உதவி தேடப் படுபவன் ஆவான்.